



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்






Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 211 24.1.2026 SATURDAY THAI : 10 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 211 24.1.2026 சனிக்கிழமை தை : 10 விலை : ரூ.5/-


## ஊரக வேலைவாய்ப்பு திட்டம்: முதல்வர் கொண்டுவந்த

# “தனித்தீர்மானம் நிறைவேற்றம்”

சென்னை: ஜன.24-

ஊரக வேலைவாய்ப்பு திட்டம் மகாத்மா காந்தி பெயரிலேயே தொடர வேண்டும் என தமிழ்நாடு சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கொண்டுவந்த அரசின் தனித் தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

100 நாள் வேலைத் திட்ட பெயரை மாற்றுவதற்கு எதிராக சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தனித் தீர்மானம் கொண்டுவந்தார். மேலும், தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்ட பெயரை மகாத்மா காந்தி பெயரிலேயே தொடரவும் தமிழ்நாடு அரசு ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றியது.

முதல்வர் ஸ்டாலின் இது குறித்து பேசியதாவது: தமிழகத்தில் 100 நாள் வேலை உறுதி திட்டம் சிறப்பாக செயல்பட்டு வந்தது. மகாத்மா காந்தியின் பெயரை நீக்கிவிட்டு விபி ஜி ராம் ஜி என பெயரிப்பட்டுள்ளதை எதிர்க்கிறோம். தமிழகத்தில் பாகுபாடின்றி மத்திய மாநில அரசுகளின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.



வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்திலும் ரூ.3112 கோடி நிதி விடுவிக்கவில்லை. இப்படி இவர்கள் நிதி ஒதுக்காமல் காலம் தாழ்த்தினால் ஏழை எளிய கிராமப்புற மக்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள். தமிழகத்தை மத்திய அரசு தொடர்ந்து வஞ்சித்து வருகிறது. தமிழகத்தின் வளர்ச்சியில் மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டை வஞ்சிப்பதையே ஒன்றிய அரசு கொள்கையாக கொண்டுள்ளது. இந்தத் திட்டத்தால் பெரும்பான்மையாக பயனடைந்து வந்த பெண்கள், மாற்றுத்திறனாளிகள் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரம் தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டும். இந்த புதிய திட்டத்தில் மாநில அரசின் பங்களிப்பு 40 சதவீதமாக உயர்த்தப்படுகையில், மாநில அரசின் நிதிச்சுமை கணிசமாக அதிகரிக்கிறது.

இதனை திருத்தி அமைக்க வேண்டும். நமது மாநிலத்தின் மீது ஏன் இவ்வளவு ஓரவஞ்சனை. நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சிகள் விபி ஜி ராம் ஜி திட்டத்தை அறிமுக நிலையிலேயே எதிர்த்தனர். ஆனால் மக்களின் குரலை மதிக்காத ஒன்றிய அரசு, இந்த திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறது.

இது குறித்து பிரதமருக்கும் கடிதம் எழுதியிருக்கிறேன். ஊரக வேலைவாய்ப்பு திட்டம் மகாத்மா காந்தி பெயரிலேயே தொடர வேண்டும். வேலைக்கான வழிமுறையை மாநில அரசே வகுத்துக் கொள்ள வழிவகை செய்ய வேண்டும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை திட்டம் தொடர்பாக எடப்பாடி பழனிசாமி, பிரதமர் மோடியிடம் பேச வேண்டும். இது குறித்து அவர் பேசுவார் என நம்புகிறேன். இவ்வாறு முதல்வர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து ஊரக வேலைவாய்ப்பு திட்டம் தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் கொண்டு வந்த தனித் தீர்மானம் குரல் வாக்கெடுப்பு மூலம் ஒருமனதாக நிறைவேறியது.



## தமிழக வெற்றிக் கழகம் சார்பில் அலங்காநல்லூர் முனியாண்டி கோவிலில் சிறப்பு பூஜை

அலங்காநல்லூர் ஜன.24

மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் பிரசித்தி பெற்ற ஸ்ரீ முனியாண்டி கோவிலில் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில், ஜனநாயகன். படம் வெற்றியடைய வேண்டி வடக்கு மாவட்ட செயலாளர் விஜய் அன்பன் கல்லானை தலைமையில், நிர்வாகிகள் சிறப்பு பூஜைகள் செய்து வழிபட்டனர். முன்னதாக அலங்காநல்லூர் பகுதிக்கு வருகை தந்த மாவட்ட செயலாளருக்கு மேளதாளங்கள் முழங்க பட்டாசு வெடித்து நிர்வாகிகள் வரவேற்பு அளித்தனர் அதனை தொடர்ந்து ஜல்லிக்கட்டில் வெற்றி பெற்ற காளைக்கு தங்ககாசு, அண்டா,பிளாஸ்டிக்சேர் உள்ளிட்டவைகளும் பொதுமக்களுக்கு அசைவ உணவு அன்னதானமும் வழங்கினர். .தேர்தல் ஆணையம் விசில் சின்னம் ஒதுக்கியதை தொடர்ந்து கேட்டுகடை பகுதியில் மாவட்ட செயலாளர் விஜய் அன்பன் கல்லானை தலைமையில் விசில் ஊதிச் சென்று பொதுமக்கள்இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது.

இதில் ஒன்றிய செயலாளர் விஜய்ஹரிஷ், தளபதி ரஞ்சித், ராமநாதன், அய்யங்காளை, வெங்கடேஷ், புகழ், கார்த்தி, முத்துக்குமார், கிருஷ்ணமூர்த்தி, முத்து உள்பட மாவட்ட ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



## திருவனந்தபுரம் தாம்பரம் ‘அம்ருத் பாரத்’ ரயிலுக்கு மதுரையில் பூக்கள் தூவி வரவேற்பு!

மதுரை: ஜன.24-

திருவனந்தபுரம் தாம்பரம் இடையிலான புதிய அம்ருத் பாரத் ரயிலை மதுரை ரயில் நிலையத்தில் கோட்ட மேலாளர் தலைமையில் அதிகாரிகள் பூக்கள் தூவி வரவேற்றனர்.

மதுரை வழியாக இயக்கப்படும் திருவனந்தபுரம் தாம்பரம் இடையேயான வாராந்திர புதிய 'அம்ருத் பாரத்' ரயில் சேவையை திருவனந்தபுரத்தில் நடந்த நிகழ்ச்சியில் பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். 22 பெட்டிகள் கொண்டு இயக்கப்படும் இந்த ரயில் தாம்பரத்தில் இருந்து புதன்கிழமைகளில் மாலை 5 மணிக்கு புறப்பட்டு மறுநாள் காலை 8 மணிக்கு திருவனந்தபுரம் சென்றடைகிறது.

மறு மார்க்கத்தில் திருவனந்தபுரம் தாம்பரம் (16122) வியாழக்கிழமைகளில் திருவனந்தபுரத்தில் இருந்து காலை 10.40 மணிக்கு புறப்பட்டு அன்று இரவு 11.45 மணிக்கு தாம்பரம் சென்று சேருகிறது.

இந்த ரயிலானது செங்கல்பட்டு, விழுப்புரம், விருத்தாசலம், அரியலூர், ஸ்ரீரங்கம், திருச்சி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், சாத்தூர், கோவில்பட்டி, நெல்லை, வள்ளியூர், நாகர்கோவில் டவுன், குழித்துறை ரயில் நிலையங்களில் நின்று செல்லும்.

இந்த ரயிலில் 8 இரண்டாம் வகுப்பு படுக்கை வசதி பெட்டிகள், 11 இரண்டாம் வகுப்பு பொதுப் பெட்டிகள், 2 மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு பெட்டிகள், ஒரு சமையல் பெட்டி ஆகியவை இணைக்கப்பட்டுள்ளது.

மதுரை ரயில் நிலையத்தில் 'அம்ருத் பாரத்' தொடக்க நாள் சிறப்பு ரயில் பூக்கள் தூவியும், கொடி அசைத்தும் வரவேற்கப்பட்டது.

இந்த ரயிலை வரவேற்ற மதுரை கோட்ட ரயில்வே மேலாளர் ஓம் பிரகாஷ் மீனா ரயிலில் ஆய்வு செய்தார். அவருடன் முதுநிலை கோட்ட ரயில் இயக்க மேலாளர் ஆர்.சிவா முதுநிலைக் கோட்ட பொறியாளர் வி.சூரியமூர்த்தி, முதுநிலை கோட்ட வர்த்தக மேலாளர் டி. எல். கணேஷ், கூடுதல் கோட்ட மேலாளர் எல்என். ராவ் உட்பட உயர் அதிகாரிகள் உடனிருந்தனர்.

## “தமிழக இளைஞர்களை போதைப் பொருள் கும்பலிடம் ஒப்படைத்து விட்டது திமுக அரசு” பிரதமர் மோடி

மதுராந்தகம்: ஜன.24-

‘‘தமிழக இளைஞர்களை போதைப் பொருள் கும்பலிடம் ஒப்படைத்துவிட்டது திமுக அரசு. தங்கள் கண் முன்னால் தங்கள் குழந்தைகள் போதைப் பொருளுக்கு அடிமையாகிக் கொண்டிருப்பதைப் பார்த்து தாய், தந்தையரெல்லாம் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். போதைப் பொருள் அபாயத்தில் இருந்து நமது இளைஞர்களை நாம் மீட்டே ஆக வேண்டும்’’ என்று பிரதமர் மோடி பேசினார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் விரைவில் நடைபெற உள்ள நிலையில், அரசியல் களம் சூடுபிடித்துள்ளது. இந்த நிலையில், தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பொதுக் கூட்டம் செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில் பங்கேற்று சிறப்புரை ஆற்றிய பிரதமர் நரேந்திர மோடி, ‘‘2026ம் ஆண்டிலே தமிழ்நாட்டுக்கு எனது முதல் பயணம் இது. தமிழகத்தில் பொங்கலுக்குப் பிறகு சிறப்பானதொரு ஆனந்தம் நிறைந்திருக்கிறது. சில நாட்களுக்கு முன்புதான் தமிழகத்தின் வளர்ச்சி நாயகர் எம்ஜிஆரின் பிறந்த நாளை நாம் கொண்டாடினோம். இந்த மேடையில் இருந்து மதுராந்தகத்தின் ஏரி காத்த ராமரை நான் வணங்கிரேன். அனைவரின் நலனுக்காகவும், தமிழ்நாட்டின் நலனுக்காகவும் நான் வேண்டிக் கொள்கிறேன்.

இன்று நேதாஜியின் பிறந்த நாள். தேசம், இந்த நாளை பராக்கிரம திருநாள் என கொண்டாடி வருகிறது. தமிழகத்தின் பராக்கிரமம் நிறைந்த தலைவர்கள் பலர், நேதாஜியோடு தோள் சேர்ந்து சுதந்திரப் போரில் பங்கெடுத்தார்கள். வீரம் மற்றும் நாட்டுப் பற்று தமிழக மக்களின் நாடி நரம்புகளில் பெருக்கெடுத்து ஓடுகிறது. இந்த புனித மண்ணில் இருந்து நேதாஜி சுபாஷ் சந்திர போஸுக்கு என் நினைவஞ்சலியை காணிக்கையாக்குகிறேன்.

மக்கள் அலைகடலென இங்கே திரண்டிருக்கிறார்கள். இது ஒட்டுமொத்த தமிழகத்துக்கும் தேசத்துக்கும் ஒரு செய்தியை தெரிவிக்கிறது. அது, தமிழ்நாடு இப்போது மாற்றத்துக்கு தயாராகிவிட்டது என்பதுதான். திமுகவின் மோசமான ஆட்சியில் இருந்து விடுபட தமிழ்நாடு துடிக்கிறது. தமிழ்நாடு இப்போது பாஜக என்டிஏ அரசை விரும்புகிறது.

இந்த மேடையைப் பாருங்கள். என்டிஏ குடும்பத்தின் நமது முத்த தலைவர்கள், தமிழகத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்க குழுமியிருக்கிறார்கள். இந்த நண்பர்கள் அனைவரும் ஒரே முடிவோடு, ஒரே உறுதிப்பாட்டோடு இங்கே இணைந்திருக்கிறார்கள். அது என்ன தெரியுமா? தமிழ்நாட்டை திமுகவிடம் இருந்து விடுவிக்க வேண்டும் என்பதே அந்த உறுதிப்பாடு.

நாம் தமிழ்நாட்டை வளர்ச்சி அடைந்த, பாதுகாப்பான, ஊழலற்ற மாநிலமாக மாற்ற வேண்டும். திமுக அரசின் முடிவுக் காலம் (கவுன்டவுன்) தொடங்கிவிட்டது. இதை என்னால், தெளிவாகக் காண முடிகிறது.

ஆட்சிசெய்ய நீங்கள் திமுகவுக்கு இரண்டு முறை வாய்ப்பளித்தீர்கள். ஆனால், அவர்கள் தமிழக மக்களுக்கு நம்பிக்கை துரோகம் இழைத்துவிட்டார்கள். வாக்குறுதிகளை அள்ளித் தெளித்தது திமுக. ஆனால், ஆற்றியது என்னமோ பூஜ்ஜியம்தான்.

திமுக அரசை மக்கள் சிவிசி அரசு என அழைக்கிறார்கள். சிஎம்சி என்றால், கரப்ஷன் (ஊழல்), மாஃபியா (மாபியா), கிரைம் (க்ரைம்) ஆகியவற்றை ஆதரிக்கும் அரசாங்கம். தமிழக மக்கள் திமுக மற்றும் சிஎம்சி இரண்டையும் வேரோடு அகற்ற முடிவெடுத்துவிட்டார்கள். இங்கு பாஜக என்டிஏவின் இரட்டை எஞ்சின் அரசு அமைவது உறுதியாகிவிட்டது.

தமிழ்நாட்டில் எப்படிப்பட்ட அரசு இருக்கிறது என்றால், இங்கு ஜனநாயகமும் இல்லை, நம்பகத்தன்மையும் இல்லை. திமுக அரசாங்கம் ஒரே ஒரு குடும்பத்துக்காக மட்டும் இயங்குகிறது. நீங்கள் திமுகவில் முன்னேற வேண்டும் என்றால், அந்த குடும்பத்துக்கு ஆமாம் சாமி போட்டாக வேண்டும். இங்கு 34 பாதைகள் மட்டுமே இருக்கின்றன. வம்சாவளி, ஊழல், பெண்களை வசைபாடுவது, நமது கலாச்சாரத்தை வசைபாடுவது ஆகியவையே அவை.

இந்த காரணத்தால்தான் திமுகவில் இருப்பவர்களால் கட்சியில் முன்னேற முடிகிறது. இதன் பாதிப்பை தமிழ்நாடு சுமக்க வேண்டி இருக்கிறது. இங்கே ஊழல் எவ்வளவு மலிந்திருக்கிறது, அந்த ஊழல் பணம் யாருடைய பைகளுக்குச் செல்கிறது என்பதை சிறு குழந்தைகூட நன்றாக தெரிந்து வைத்திருக்கிறது.

தமிழ்நாடு எப்படிப்பட்ட பூமி என்றால், இதுதான் பாரதத்தின் பண்பாட்டை வளம் நிறைந்ததாக ஆக்கியது. சங்க கால இலக்கியங்கள், விஞ்ஞானம், ஆலயங்கள், தொழில்நுட்பம், பாரத நாட்டின் கவுரவத்தை உயர்த்தின.

வளர்ச்சி அடைந்த பாரதத்தை நோக்கி நாடு சென்று கொண்டிருக்கும் நிலையில், தமிழ்நாட்டை திமுகவின் கொடூர கரங்களில் இருந்து நாம் விடுவித்தாக வேண்டும். எந்த அளவுக்கு தமிழ்நாடு வேகமாக முன்னேறுகிறதோ, அந்த அளவு தேசமும் முன்னேற்றம் அடையும்.

கடந்த 11 ஆண்டுகளாக மத்தியில் ஆட்சியில் உள்ள என்டிஏ அரசாங்கம், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக வரலாறு காணாத பணிகளை ஆற்றி இருக்கிறது. 2014க்கு முன்பு, திமுக காங்கிரஸ் கூட்டணி ஆட்சி இருந்தபோது அப்போது தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக குறைவான நிதியே ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், கடந்த 11 ஆண்டுகளில் அதிகாரப் பகிர்வு வாயிலாக மட்டும் என்டிஏ அரசு கிட்டத்தட்ட 3 லட்சம் கோடி ரூபாயை தமிழ்நாட்டுக்கு வழங்கி இருக்கிறது. காங்கிரஸ் திமுக கூட்டணி ஆட்சிக் காலத்தோடு ஒப்பிடும்போது இது கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகம்.

இதுமட்டுமல்ல, கடந்த 11 ஆண்டுகளில் தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக மத்திய அரசு 11 லட்சம் கோடி ரூபாய் உதவிகளை அளித்திருக்கிறது. ஆனால், திமுக காங்கிரஸ் கூட்டாட்சி யின்போது ஏழைகள், பட்டியல் சமூக மக்கள், பழங்குடி மக்கள், இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு நலன்கள் வழங்குகிறோம் என்ற பெயரில் மோசடி மட்டும்தான் அரங்கேறின.

திமுக காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ரயில் பட்ஜெட்டுக்கு அளித்த நிதியைவிட என்டிஏ அரசு ஏழு மடங்கு அதிக நிதியை தமிழ்நாட்டுக்கு அளித்து வருகிறது. தமிழ்நாட்டில் 80 ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. வந்தே பாரத் போன்ற நவீனமான, விரைவாகச் செல்லக்கூடிய, இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட ரயில்களை என்டிஏ அரசுதான் அளித்திருக்கிறது.

தமிழ்நாட்டின் மிகப் பெரிய பலம், நமது விவசாயிகள், நமது மீனவர்கள்தான். என்டிஏ அரசின் கொள்கைகள் காரணமாக தேசத்தின் விவசாயம் மற்றும் மீன்வளத் துறையில் சாதனைப் படைக்கும் உற்பத்தி எட்டப்பட்டு இருக்கிறது. மத்திய அரசு ஒவ்வொரு நிலையிலும் விவசாயிகளுக்கும் மீனவர்களுக்கும் ஆதரவாக இருந்து வருவதுதான் இதற்குக் காரணம்.

முன்பு குறைவான விவசாயிகளிடம் மட்டுமே வங்கிக் கணக்குகள் இருந்தன. என்டிஏ அரசாங்கம் வங்கிக் கணக்குகளை திறந்து கொடுத்தது. அதோடு, விவசாயிகளுக்கான பிரதமரின் கவுரவக் கொடை திட்டத்தை செயல்படுத்தியது. இந்த திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டின் விவசாயிகளுக்கு கிட்டத்தட்ட 4 லட்சம் கோடி ரூபாய் கிடைத்திருக்கிறது.

என்டிஏ அரசாங்கம் பிரதமரின் மீன் வளர்ப்பு திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இதன் கீழ் மீனவர்களுக்கு 50 ஆயிரம் கடன் அட்டை கொடுக்கப்பட்டிருக்கிறது.

வளர்ச்சி அடைந்த தமிழ்நாட்டை உருவாக்குவதில் இளைஞர்களுக்கும் முன்பாக, பெண்களுக்கும் பெரிய பங்களிப்பு இருக்கிறது. ஆனால், இங்கே இருப்பதோ திமுக அரசு. இவர்கள் நமது இளைஞர்களை போதைப் பொருள் குற்றவாளி கும்பலிடம் ஒப்படைத்துவிட்டார்கள்.

தாய், தந்தையரெல்லாம் தங்கள் கண்களுக்கு முன்பாக, தங்கள் குழந்தைகள் போதைப் பொருட்களுக்கு நாசமாகிக் கொண்டிருப்பதைப் பார்த்து துடித்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் நமது இளைஞர்களை போதைப் பொருள் அபாயத்தில் இருந்து மீட்டே ஆக வேண்டும். என்டிஏவுக்கு நீங்கள் அளிக்கும் ஒவ்வொரு வாக்கும், தமிழ்நாட்டை போதைப் பொருட்களில் இருந்து மீட்டெடுக்க உதவும் வாக்காக இருக்கும்.

திமுக அரசாங்கத்தில் போதைப் பொருள் பெருங்குற்றவாளிகளும் மதுபான பெருங்குற்றவாளிகளும் செழிப்பாக இருக்கிறார்கள். தேசிய ஜனநாயக கூட்டணியே மக்களின் உடல் நலத்தில் மட்டுமே அக்கறை கொண்டுள்ளது’’ என தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, பாமக தலைவர் அன்புமணி, அமமுக தலைவர் டிடிவி தினகரன், தமாகா தலைவர் ஜி.கே.வாசன், புதிய நீதிக் கட்சி தலைவர் ஏ.சி.சண்முகம், தமிழக மக்கள் முன்னேற்றக் கழக தலைவர் ஜான் பாண்டியன், புரட்சி பாரதம் கட்சித் தலைவர் ஜெகன்மூர்த்தி உள்ளிட்ட கூட்டணி கட்சிகளை சேர்ந்த தலைவர்கள், பாஜக மூத்த தலைவர்கள், நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த தொண்டர்கள் ஏராளமானோர் பங்கேற்றனர்.

# அசுத்தமான குடிநீரால் இந்தூரில் 22 பேருக்கு உடல்நல பாதிப்பு: மீண்டும் அதிர்ச்சி



இந்தூர், ஜன.24-
மத்தியப் பிரதேசத்தின் இந்தூரில், அசுத்தமான குடிநீரால் 23 பேர் உயிரிழந்தும், பலர் உடல்நலம் பாதிக்கப்பட்டும் சில வாரங்களே ஆன நிலையில், தற்போது மீண்டும் அசுத்தமான நீரைக் குடித்ததால் 22 பேர் நோய்வாய்ப்பட்டுள்ள சம்பவம் அதிர்ச்சியை உருவாக்கியுள்ளது.

இந்தூரின் மஹோவ் பகுதியில் அசுத்தமான குடிநீரைக் குடித்ததால் 22 பேர் உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 9 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர், மீதமுள்ள நோயாளிகள் மருத்துவக் கண்காணிப்பின் கீழ் வீடுகளிலேயே சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மஹோவ் மற்றும் அதன் அருகிலுள்ள பகுதிகளிலும் சிலர் அசுத்தமான குடிநீரால் பாதிக்கப்பட்டுள்ளதால், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 25ஐ தாண்டக்கூடும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து புகார்கள் வெளிவரத் தொடங்கியதைத் தொடர்ந்து, மாவட்ட நிர்வாகம் நேற்று இரவு இதற்கான நடவடிக்கையில் இறங்கியது. மாவட்ட ஆட்சியர் சிவம் வர்மா நோயாளிகளைச் சந்திக்க மருத்துவமனைக்குச் சென்று, மீட்புப் பணிகளை மேற்பார்வையிட்டார்.

மேலும், பல்வேறு சுகாதாரக் குழுக்கள் அப்பகுதிக்கு அனுப்பப்பட்டன. பாதிக்கப்பட்ட சுற்றுப்புறங்களில் உள்ள நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாக சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த மாத தொடக்கத்தில் இந்தூரில் அசுத்தமான குடிநீரால் பாதிக்கப்பட்டு சுமார் 25 பேர் உயிரிழந்ததாக உள்ளூர்வாசிகள் தெரிவித்தனர். ஆனால், அதிகாரப்பூர்வ தரவுகளின்படி இறப்பு எண்ணிக்கை 15 என அரசு தரப்பு தெரிவித்தது. குடிநீர் மாசுபாட்டிற்கான காரணங்களை விசாரிக்கவும், இது மீண்டும் நிகழாமல் தடுக்க பரிந்துரைகளை வழங்கவும் அரசாங்கம் ஒரு உயர்மட்டக் குழுவை அமைத்தது.

இந்த விவகாரம் மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றத்திலும் விசாரணையில் உள்ளது. மேலும், பாதிக்கப்பட்ட 21 பேரின் குடும்பங்களுக்கு அரசு தரப்பில் தலா ரூ.2 லட்சம் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

# “ஊழல் திமுக அரசுக்கு விடை கொடுக்கும் காலம் வந்துவிட்டது” பிரதமர் மோடி



சென்னை, ஜன.24-
“ஊழல் திமுக அரசுக்கு விடை கொடுக்கும் காலம் வந்துவிட்டது என்று தமிழ்நாடு முடிவு செய்துவிட்டது. தமிழ்நாடு தேசிய ஜனநாயகக் கூட்டணியுடன் இருக்கிறது” என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பிரதமர் மோடி தமிழில் வெளியிட்ட எக்ஸ் பதிவில், “தமிழ்நாடு தேசிய ஜனநாயகக் கூட்டணியுடன் இருக்கிறது. மதுராந்தகத்தில் இன்று பிற்பகலில் நடைபெறும் பேரணியில் நான் தேசிய ஜனநாயகக் கூட்டணித் தலைவர்களுடன் கலந்து கொள்ள இருக்கிறேன்.

ஊழல் திமுக அரசுக்கு விடை கொடுக்கும் காலம் வந்துவிட்டது என்று தமிழ்நாடு முடிவு செய்துவிட்டது. தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியின் சாதனையும் பிராந்திய பெருவிருப்பங்கள் மீதான அதன் அர்ப்பணிப்பும் மாநில மக்கள் மனதில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன’’ எனத் தெரிவித்துள்ளார்.

இன்று செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் நடைபெறும் தேசிய ஜனநாயக கூட்டணியின் பிரம்மாண்டமான பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி கலந்து கொள்கிறார். இந்த பொதுக்கூட்டத்தில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், பாமக தலைவர் அன்புமணி, அமமுக பொதுச்செயலாளர் டிடிவி. தினகரன், தமாகா தலைவர் ஜி.கே.வாசன் உள்ளிட்ட தேஜகூட்டணி தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

# பைக் டாக்ஸிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கம் கர்நாடக ஐகோர்ட் உத்தரவு!



பெங்களூரு, ஜன.24-
கர்நாடக மாநிலத்தில் விதிக்கப்பட்டுள்ள பைக் டாக்ஸி சேவைகளுக்கான தடையை அம்மாநில உயர் நீதிமன்றம் இன்று நீக்கி உத்தரவிட்டது. மேலும், மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் இருசக்கர வாகனங்களை போக்குவரத்து வாகனங்களாகப் பதிவு செய்து, அவற்றுக்கு ஒப்பந்த வாகனப் போக்குவரத்து அனுமதி வழங்க அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

தலைமை நீதிபதி விபு பக்ரு மற்றும் நீதிபதி சி.எம். ஜோஷி ஆகியோர் அடங்கிய அமர்வு, ஓலா, ஊபர் மற்றும் ராபிடோ உள்ளிட்ட நிறுவனங்கள் தாக்கல் செய்த மேல்முறையீடுகள் மீது இன்று தீர்ப்பளித்தது. அந்த தீர்ப்பில், கர்நாடகாவில் பைக் டாக்ஸிகள் இயக்கத்திற்கு அனுமதி அளித்ததுடன், சட்டப்பூர்வ அனுமதிகளுக்கு உட்பட்டு இருசக்கர வாகனங்களை போக்குவரத்து வாகனங்களாகப் பயன்படுத்தலாம் என்றும் தீர்ப்பளித்தது.

ராபிடோ, ஓலா மற்றும் உபேர் நிறுவனங்களின் பைக் டாக்ஸி சேவைகளை இயக்குவதற்கு கடந்த ஆண்டு ஏப்ரல் 2ஆம் தேதி தனி நீதிபதி தடை விதித்திருந்தார். இதனை எதிர்த்து அந்த நிறுவனங்கள் மேல்முறையீடு செய்திருந்தன.

தற்போது, உயர் நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வு தனி நீதிபதியின் தீர்ப்பை ரத்து செய்ததுடன், நிறுவனங்கள் பைக் டாக்ஸி சேவைகளை வழங்க தற்போதைய விதிகளின் கீழ் உரிமம் வழங்குவதற்கு, கூடுதல் நிபந்தனைகளை விதிக்கவும் கர்நாடக அரசுக்கு சுதந்திரம் அளித்துள்ளது. மேலும், இருசக்கர வாகன உரிமையாளர்கள் மற்றும் பைக் டாக்ஸி நிறுவனங்கள் உரிமங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும் என்றும், தற்போதுள்ள சட்டங்களின்படி அரசாங்கம் அனுமதி வழங்க வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

விண்ணப்பங்களின் அனைத்து தொடர்புடைய அம்சங்களையும் மாநில அரசு ஆராயலாம் என்றாலும், வாகனம் ஒரு மோட்டார் சைக்கிள் என்பதற்காக மட்டும் டாக்ஸி பதிவை மறுக்க முடியாது என்று நீதிமன்றம் கூறியது.

கர்நாடகாவில் பைக் டாக்ஸி சேவைகளுக்கான முழுமையான தடை கடந்த ஆண்டு ஜூன் மாதம் நடைமுறைக்கு வந்தது. தெளிவான ஒழுங்குமுறை கட்டமைப்பு இல்லாததைக் காரணம் காட்டி, ராபிடோ, ஓலா மற்றும் ஊபர் மோட்டோ போன்ற தளங்களை சட்டவிரோதமானவை என்று அறிவித்த அரசின் உத்தரவை உறுதி செய்த உயர் நீதிமன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து கர்நாடக அரசு இந்தத் தடையை அமல்படுத்தியது.

# “அதிமுக இன்னும் கொஞ்சநாள் பத்திரமாக இருக்க வேண்டும் என்பதே எங்கள் கவலை” கனிமொழி எம்.பி



“தஞ்சாவூர், ஜன.24-
இன்னும் கொஞ்சநாள் அதிமுக பத்திரமாக இருக்க வேண்டும் என்பது தான் தங்களது கவலையாக இருப்பதாக எம்.பி. கனிமொழி தெரிவித்தார். தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டி பகுதியில் வரும் 26ம் தேதி, திமுக மகளிரணி மாநாடு நடைபெற உள்ளது.

மாநாட்டு ஏற்பாடுகளை நேற்று ஆய்வு செய்த எம்.பி. கனிமொழி செய்தியாளர்களிடம் கூறியது: மேற்கு மண்டலத்தில் வெல்லும் தமிழ் பெண்கள் மகளிர் அணி மாநாடு வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

அந்த மாநாடு, பெண்களின் ஆதரவு யார் பக்கம் இருக்கிறது என்பதை மிகத் தெளிவாக எடுத்து சொல்லக்கூடிய வகையில் அமைந்திருந்தது. தமிழகம் முழுவதும் பெண்கள் திமுகவை சார்ந்து இருக்கிறார்கள்.

அவர்கள் மறுபடியும் திமுக வெற்றிபெற வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள் என்பதை எடுத்து சொல்லக்கூடிய மாநாடாக, தஞ்சாவூரில் நடைபெறும் மாநாடு நிச்சயமாக அமையும். சுமார் 1.25 லட்சம் மகளிருக்கு மேல் இந்த மாநாட்டில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கிறோம்.

அதிமுக தேர்தல் அறிக்கை வெளியிடவில்லை. சில அறிவிப்புகளை தான் வெளியிட்டு இருக்கிறது. அதிமுக ஏற்கெனவே திட்டமாக அறிவித்ததை, அவர்கள் செயல்படுத்த மறந்துவிட்டார்கள்.

பெண்களுக்கு ஸ்கூட்டி வழங்கும் திட்டத்தை, பிரதமரை அழைத்து ஒரு திட்டமாக அறிவித்தார்கள். அதை யாருக்கும் கொடுக்காததால், அதை மறந்து விட்டு, மறுபடியும் தேர்தல் அறிவிப்பாக வெளியிட்டுள்ளனர். எனவே, அதுகுறித்து கருத்து சொல்ல ஒன்றும் இல்லை.

அதிமுக தங்களுக்கு உடன்பாடு இல்லாதவர்களுடன் இணைந்து ஒரு கூட்டணியை உருவாக்கினால், எப்படி வெற்றி பெற முடியும். அதிமுக என்ற கட்சி இன்னும் கொஞ்சம் நாளாவது பத்திரமாக இருக்க வேண்டும் என்று தான் தொடர்ந்து சொல்லிக் கொண்டு உள்ளோம். எங்களது கவலையும் அதுவாகத்தான் உள்ளது.

தேர்தல் வருவதால் பிரதமர் மோடி தமிழகத்துக்கு அடிக்கடி வருவார். இவ்வாறு அவர் கூறினார். அப்போது எம்.பி. முரசொலி, எம்எல்ஏக்கள் துரை.சந்திரசேகரன், டிகேஜி.நீலமேகம், பூண்டி கலைவாணன், மேயர் சண்.ராமநாதன், துணை மேயர் அஞ்சுகம் பூபதி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# காஞ்சி காமகோடி பீடத்திடமே 3 யானைகளையும் திரும்ப ஒப்படைக்க ஐகோர்ட் உத்தரவு



சென்னை, ஜன.24-
காஞ்சிபுரம் காமகோடி பீடத்துக்கு சொந்தமான 3 யானைகளை பீடத்திடமே திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்ற தனி நீதிபதியின் உத்தரவை உறுதி செய்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காஞ்சிபுரம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தில் வழிபாடுகளுக்காக சந்தியா, இந்து, ஜெயந்தி ஆகிய மூன்று யானைகள் உரிய சான்றிதழுடன் கோவில் திருவிழாக்கள், பூஜைகளுக்கு அவ்வபோது பயன்படுத்தப்பட்டு வந்தன.

இந்த யானைகளை கவனித்து வந்த பாகன் 2015ல் காலமானதால், 3 யானைகளும் வனத்துறையிடம் பரமாரிப்பதற்காக ஒப்படைக்கப்பட்டன. இதையடுத்து திருச்சி எம்.ஆர் பாளையம், யானை காப்பகத்தில் 3 யானைகள் பராமரிக்கப்பட்டு வந்தன.

இந்நிலையில், யானைகளை பராமரிக்க தேவையான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளதால், கோனேரிக்குப்பம் யானைகள் மையத்துக்கு மீண்டும் அனுப்பக் கோரி காமகோடி பீடம் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், பீடத்துக்கு சொந்தமான கோனோரிக்குப்பம் மையத்தை நிபுணர் குழு ஆய்வு செய்ய உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், இந்த வழக்கை விசாரித்த தனி நீதிபதி, ‘‘சந்தியா, இந்து, ஜெயந்தி ஆகிய 3 யானைகளையும் காஞ்சி காமகோடி பீடத்திடம் 1 வாரத்தில் ஒப்படைக்க வேண்டும். காஞ்சி பீடத்தின் செலவில் வனத்துறை வாகனத்தில் பாதுகாப்பாக யானையை கொண்டு வர வேண்டும். யானைகளின் உடல்நிலை குறித்து 3 மருத்துவர்கள் கொண்ட குழுவினர் அறிக்கை தந்த பின்னர் கோனேரிகுப்பம் முகாமிற்கு மாற்ற வேண்டும். யானைகளை வழிபாடுகளுக்கு பயன்படுத்தலாம். மாதத்திற்கு 1 முறை யானையின் உடல் நலம் குறித்து மாவட்ட நல்வாழ்வுத்துறை ஆய்வு செய்ய வேண்டும்’’ என உத்தரவிட்டார்.

தனி நீதிபதியின் இந்த உத்தரவை எதிர்த்து வனத்துறை சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு தலைமை நீதிபதி எம்.எம். வஸ்தவா, நீதிபதி அருள்முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, வனத்துறை சார்பில் ஆஜரான வழக்கறிஞர், ‘‘யானைகளுக்கு வயதாகி விட்டது. 58 ஏக்கரில் உள்ள திருச்சி முகாமிற்கு மோசமாக உடல்நிலையில் 2019ம் ஆண்டு யானைகள் கொண்டு வரப்பட்டன. 8 யானைகள் இருந்த நிலையில் 1 யானை இறந்து விட்டதால், தற்போது 7 யானைகள் முகாமில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் யானைகளை அனுப்பினால், மீண்டும் உடல்நிலை பாதிக்க வாய்ப்பு உள்ளது. கால அவகாசம் அளிக்க வேண்டும்’’ என தெரிவிக்கப்பட்டது.

இதை ஏற்காத நீதிபதிகள், ‘‘பீடத்துக்கு சொந்தமான யானைகளை 6 ஆண்டுகள் வனத்துறை வைத்துள்ளது. போதுமான ஏற்பாடுகளை செய்துள்ள நிலையில், பீடத்திடம் யானைகளை தர வனத்துறை மறுக்க முடியாது. யானைகளை உரிய மருத்துவ பரிசோதனைக்கு பின் வழங்க வேண்டும் என நீதிபதி உத்தரவிட்டுள்ளார். அதனால், தனி நீதிபதியின் முடிவில் தலையிட முடியாது’’ என உத்தரவிட்டு வழக்கை தள்ளுபடி செய்தனர்.



# தனியார் ஹெலிகாப்டர் நிறுவனத்தை மிரட்டிய விசிக எம்எல்ஏ பாலாஜி மீது வழக்கு பதிய வேண்டும்: பாஜக

சென்னை ஜன.24-
சென்னை கோவளத்தில் உள்ள தனியார் ஹெலிகாப்டர் போக்குவரத்து நிறுவனத்தினரை மிரட்டிய விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினர் பாலாஜி மீது உரிய பிரிவுகளில் வழக்குப் பதிய வேண்டும் என்று பாஜக வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் தலைமை செய்தித் தொடர்பாளர் நாராயணன் திருப்பதி வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘‘சென்னை கோவளத்தில் தனியார் ஹெலிகாப்டர் போக்குவரத்து நிறுவனத்தினரை மிரட்டி லஞ்சம் கேட்டதாகவும் , குண்டர்களை வைத்து தங்களை அலுவலகத்திற்குள் சிறை வைத்ததாகவும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் பாலாஜி மீது அந்நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி தமிழக சபாநாயகர் அப்பாவுவிடம் புகார் அளித்ததாக செய்தியை காண நேர்ந்தது.


இது குறித்து கேட்டதற்கு, அந்த ஹெலிகாப்டரை இயக்கும் பைலட்டுக்கு லைசென்ஸ் உள்ளதா, ஹெலிகாப்டர் எந்த ஆண்டு தயாரிக்கப்பட்டது? அதற்கு காப்பீடு உள்ளதா என்ற கேள்விகளுக்கு பதில் சொல்லாததால் தான் இந்நிலை என்று சட்டமன்ற உறுப்பினர் கூறியுள்ளது அதிர்ச்சியளிக்கிறது.

மத்திய, மாநில அரசுகளின் அனுமதியோடு செயல்படும் நிறுவனத்தை கேள்விகேட்டு மிரட்டுவதற்கு சட்டமன்ற உறுப்பினருக்கு எந்த அதிகாரமும் இல்லை. மேலும், மிரட்டி லஞ்சம் கேட்பதும், துன்புறுத்துவதும் பெரும் குற்றம்.

இது குறித்து சபாநாயகரிடம் புகார் அளிக்க வேண்டிய கட்டாயம் ஏன் ஏற்பட்டது? காவல்துறையினரிடம் புகார் அளிக்கவில்லையா? அல்லது புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லையா? என்பது போன்ற கேள்விகளுக்கு தமிழக அரசு விளக்கமளிப்பதோடு, துரித விசாரணை நடத்தி சட்டமன்ற உறுப்பினர் மீது உரிய பிரிவுகளில் வழக்கு பதிய உத்தரவிட வேண்டும்.

சட்டம், ஒழுங்கை சட்டமன்ற உறுப்பினர்களே சீர்குலைக்கும் அளவிற்கு திராவிட மாடல் திமுக ஆட்சியில் தமிழகம் தடுமாறிக்கொண்டிருப்பது வெட்கக்கேடு’’ என தெரிவித்துள்ளார்.

# கிரீன்லாந்து விவகாரம் எங்களுக்கு தேவையற்றது: ரஷ்ய அதிபர் புதின் கருத்து



மாஸ்கோ, ஜன.24-
கிரீன்லாந்து விவகாரம் எங்களுக்கு தேவையற்ற விஷயம் என்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் தெரிவித்துள்ளார்.

ஆர்டிக் பகுதியில் அமைந்துள்ள கிரீன்லாந்து, ஐரோப்பிய நாடான டென்மார்க் ஆட்சி அதிகாரத்தின் கீழ் உள்ளது. பாதுகாப்பு காரணங்களுக்காக கிரீன்லாந்து தீவை அமெரிக்காவுக்கு வழங்க வேண்டும் என்று அதிபர் டொனால்டு ட்ரம்ப் நிர்பந்தம் அளித்து வருகிறார். மேலும், கிரீன்லாந்தில் வாழும் சுமார் 57 ஆயிரம் மக்கள் ஒவ்வொருவருக்கும் தலா ஒரு லட்சம் டாலர் அளிப்பேன் என்றும் ட்ரம்ப் கூறினார்.

இதற்கு டென்மார்க் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. அதிபர் ட்ரம்ப்பின் அறிவிப்பை அடுத்து கிரீன்லாந்தில் டென்மார்க் அரசு படைகளை குவித்து கண்காணித்து வருகிறது. இதற்கிடையில் ட்ரம்ப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து கிரீன்லாந்து மக்களும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த விவகாரம் தொடர்பாக ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினிடம் மாஸ்கோவில் நேற்று நிருபர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு புதின் அளித்த பதில் வருமாறு: கிரீன்லாந்து பகுதியை ஒரு காலனியாகவே டென்மார்க் நிர்வகித்து வருகிறது. அப்பகுதி மக்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டு உள்ளன.

எந்த காரணத்துக்காகவும் நாங்கள் கிரீன்லாந்தை உரிமம் கொண்டாட மாட்டோம். இது எங்களுக்கு தேவையில்லாத விஷயம். இந்த பிரச்சினையை அவர்களே (அமெரிக்கா, டென்மார்க்) தீர்த்து கொள்வார்கள். இவ்வாறு அதிபர் புதின் தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப் வாபஸ்

கிரீன்லாந்து விவகாரத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கு விடுக்கப்பட்ட வர்த்தக வரி விதிப்பு மிரட்டலை அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் அதிரடியாக வாபஸ் பெற்றார்.

சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்று வரும் உலகப் பொருளாதார மன்ற மாநாட்டில் பங்கேற்றுள்ள அதிபர் ட்ரம்ப், கிரீன்லாந்து மீதான அமெரிக்காவின் கட்டுப்பாட்டை நிலைநாட்ட ஐரோப்பிய நாடுகள் ஒத்துழைக்க வேண்டும். ஒத்துழைக்க தவறினால் 8 ஐரோப்பிய நாடுகளின் மீது கடுமையான வர்த்தக வரி விதிக்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில், புதன்கிழமை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு இந்த வரிவிதிப்பு திட்டத்தை கைவிடுவதாக ட்ரம்ப் அறிவித்துள்ளார். ட்ரம்பின் இந்த திடீர் மனமாற்றத்தைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகள் நிம்மதி பெருமூச்சு விட்டுள்ளன.



## சங்கரன்கோவிலில் தேசிய சாலை பாதுகாப்பு மாத விழா விழிப்புணர்வு நிகழ்ச்சி

தென்காசி, ஜன.24-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் பேருந்து நிலையத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், போக்குவரத்து காவல்துறை ஒழுங்குப் பிரிவு மற்றும் வேல்ஸ் பப்ளிக் ஸ்கூல் (சிபிஎஸ்இ) வடக்கு புதூர் சங்கரன்கோவில் இணைந்து நடத்தும், தேசிய சாலை பாதுகாப்பு மாத விழா விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கா. ராஜன் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 நிகழ்ச்சியினை துவக்கி வைத்தார். உடன் வேல்ஸ் ஸ்கூல் தாளாளர் சண்முக சாமி மற்றும் சமூக சேவை மற்றும் காவல்துறையினர் முன்னிலை வகித்தனர். மேலும், இக்கூட்டத்தில் பள்ளி மாணவ மாணவியர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தூத்துக்குடியில் 25,000 ஏக்கரில் சீரமைப்பு பணிகள் தீவிரம்

### 25 லட்சம் டன் உப்பு உற்பத்திக்கு இலக்கு

தூத்துக்குடி, ஜன.24-

தூத்துக்குடி மாவட்டத்தில் நடப்பு ஆண்டு 25 லட்சம் டன் உப்பு உற்பத்தி என்ற இலக்கை குறிவைத்து 25 ஆயிரம் ஏக்கர் உப்பளங்களை தயார்படுத்தும் பணிகள் தொடங்கி உள்ளன.



நாட்டின் உப்பு உற்பத்தியில் குஜராத்துக்கு அடுத்தப்படியாக தூத்துக்குடி மாவட்டம் 2ம் இடத்தில் உள்ளது. அம்மாவட்டத்தில் வேம்பார், தூத்துக்குடி, முத்தையாபுரம், முள்ளக்காடு, ஆறுமுகநேரி பகுதிகளில் 25 ஆயிரம் ஏக்கரில் உப்பளங்கள் உள்ளன. இவற்றில் சுமார் 50 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர்.

ஜனவரி மாதம் உப்பு உற்பத்திக்கான பணிகள் தொடங்கும். ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான 6 மாதங்கள்தான் உப்பு உற்பத்திக்கு உகந்த காலம். அக்டோபர் மாதம் வடகிழக்கு பருவமழை தொடங்கியதும் உப்பு சீஸன் முடிவடையும். ஆண்டுக்கு சராசரியாக 25 லட்சம் டன் உப்பு உற்பத்தி செய்யப்படுவது வழக்கம். ஆனால், கடந்த ஆண்டு சுமார் 19 லட்சம் டன் உப்பு மட்டுமே உற்பத்தியானது.

குறைவாக உற்பத்தி செய்யப்பட்டாலும் தமிழகத்தில் உப்பு விலை உயரவில்லை. இந்நிலையில், கடந்த 19ம் தேதி தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை விலகியது. இதைத் தொடர்ந்து, தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 25 ஆயிரம் ஏக்கர் உப்பளங்களையும் சீரமைக்கும் பணிகள் தீவிரமடைந்துள்ளன. கடந்த ஒரு மாதமாகவே மழை பெய்யவில்லை.

இதனால், உப்பளங்களில் தேங்கியிருந்த ஜிப்சத்தை அகற்றும் பணியை தொழிலாளர்கள் மேற்கொண்டனர். தற்போது, உப்பளங்களில் குவிந்துள்ள மணல் குவியல்களை அகற்றுதல், கரைகளை சீரமைத்தல், ஆழ்துளைக் கிணறுகளை சரி செய்தல், பாத்திகளில் உப்புநீர் நிரப்புதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பணிகள் முடிவடைந்து உப்பு உற்பத்தி தொடங்குவதற்கு மார்ச் மாதமாகிவிடும். எனவே, நடப்பாண்டு மார்ச் முதல் வாரத்திலேயே உப்பு உற்பத்தி முழு அளவில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டு உப்பு உற்பத்தி குறைந்த நிலையில், இந்த ஆண்டு எப்படி இருக்கும் என்பது வரும் மாதங்களில் நிலவும் வானிலையைப் பொறுத்தே அமையும் என உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

## குரோஷியாவில் இந்திய தூதரகம் மீது காலிஸ்தான் ஆதரவாளர்கள் தாக்குதல்: வெளியுறவுத்துறை கண்டனம்

புதுடெல்லி, ஜன.24-

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான குரோஷியாவில் அமைந்துள்ள இந்திய தூதரகத்தின் மீது காலிஸ்தான் ஆதரவு பிரிவினைவாதிகள் தாக்குதல் நடத்தியதாக தகவல் வெளியாகி உள்ளது. இதற்கு வெளியுறவுத்துறை அமைச்சகம் கண்டனம் தெரிவித்துள்ளது.




இந்த தாக்குதல் சம்பவம் வியாழக்கிழமை (ஜன.22) அன்று குரோஷியா தலைநகரான ஸாகிரேப்பில் உள்ள இந்திய தூதரகத்தின் மீது நடந்துள்ளது. சம்பவத்தன்று அத்துமீறி இந்திய தூதரகத்துக்குள் நுழைந்த காலிஸ்தான் ஆதரவாளர்கள் சிலர், அங்கு தாக்குதல் நடத்தி உள்ளனர். தொடர்ந்து அங்கிருந்த இந்திய தேசிய கொடியினை அவர்கள் அகற்றியாகவும் தகவல்.

“இந்தியாவுக்கு எதிராக செயல்படும் சிலர், குரோஷியாவில் அமைந்துள்ள எங்கள் தூதரகத்தின் உள்ளே அத்துமீறி நுழைந்து, தாக்குதல் நடத்தி உள்ளனர். இதை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம். இந்த சம்பவத்தை குரோஷிய அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளோம். இதற்கு காரணமானவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென புதுடெல்லி மற்றும் ஸாகிரேப்பில் உள்ள குரோஷியா அதிகாரிகளிடத்தில் வலியுறுத்தி உள்ளோம்.

இது மாதிரியான செயல்கள் தாக்குதல் மேற்கொண்டவர்கள் பின்னணியை எடுத்துரைக்கும் வகையில் உள்ளது. நிச்சயம் இது சட்ட ரீதியான நடவடிக்கைக்குள் அவர்களை உட்படுத்தும்” என வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்தியா மற்றும் ஐரோப்பிய யூனியன் இடையே அடுத்த வாரம் முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ள நிலையில் இந்த தாக்குதல் நடந்துள்ளது.

## ஜல்லிக்கட்டு போட்டி விதிகளை தளர்த்தியது தமிழக அரசு!

சென்னை, ஜன.24-

ஜல்லிக்கட்டுப் போட்டிகளை நடத்துவதில் உள்ள சிரமங்களை களையும் பொருட்டு, ஜல்லிக்கட்டு போட்டிகளுக்கான விதிமுறைகளில் சில தளர்வுகளை தமிழக அரசு அறிவித்துள்ளது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழ்நாட்டில் பாரம்பரிய வீர விளையாட்டான ஏறுதழுவுதல் என்னும் ஜல்லிக்கட்டு நடத்துவதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது.

ஜல்லிக்கட்டுக்காகவே மதுரை அலங்காநல்லூரில் “கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம்” அமைக்கப்பட்டு அனைவரும் பெருமைகொள்ளும் வகையில் அங்கே ஜல்லிக்கட்டு நடைபெற்று வருகிறது.



17 01 2026 அன்று அலங்காநல்லூர் பகுதியில் நடைபெற்ற ஏறுதழுவுதல் போட்டியை பார்வையிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின், ஜல்லிக்கட்டுப் போட்டிகளில் பங்குபெற்று அதிகக் காளைகளை அடக்கிச் சிறந்து விளங்கக்கூடிய வீரர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் கால்நடை பராமரிப்புத் துறையில் உரிய அரசுப் பணியிடங்களில் பணியமர்த்திட வழிவகை செய்யப்படும் என்றும், உலகப் புகழ் பெற்ற தமிழ்நாட்டின் ஜல்லிக்கட்டுக் காளைகளுக்கான சிறந்த உயர்தர சிகிச்சை மற்றும் பயிற்சி மையம் 2 கோடி ரூபாய் செலவில் அலங்காநல்லூர் பகுதியில் அமைக்கப்படும் என்றும் இரண்டு சிறப்பான அறிவிப்புகளை அறிவித்தார்கள்.

மேலும், ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்துவதில் இருக்கும் ஒரு சில சிரமங்கள் அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து அவற்றைப் பரிசீலித்து காளைகளுக்கு எவ்வித துன்பமும் நேராவண்ணமும், ஜல்லிக்கட்டுப் போட்டிகளுக்கு இடையூறு இல்லாத வண்ணமும் தமிழ்நாடு அரசு சில தளர்வுகளை வழங்கிட நடவடிக்கை எடுத்துள்ளது.

தளர்வுகள் என்னென்ன?

1. உள்ளூர் காளைகளும், வீரர்களும் பங்குபெறுவதை உறுதி செய்திட ஏதுவாக, ஆன்லைன் பதிவு முறையினை மாற்றி, அந்தந்த மாவட்ட அளவில் முடிவு செய்துகொள்ள வழிவகை செய்யப்படும்.

2. போட்டிகளின்போது இறக்க நேரிடும் மாடுபிடி வீரர்களுக்கு உரிய நிவாரணம் அரசு சார்பில் வழங்கப்படுகிறது. எனவே, மாடுபிடி வீரர்களுக்கு ஆயுள் காப்பீடு கட்டாயம் என்ற விதி தளர்த்தப்படும்.

3. இதுவரை ஜல்லிக்கட்டு போட்டி நடத்துபவர்களிடம் முத்திரைத் தாளில் பெறப்பட்டு வந்த உறுதிமொழிப் பத்திரம் என்ற நடைமுறை ரத்து செய்யப்படும்.

தமிழ்நாட்டின் பாரம்பரியத்தைக் காப்பதிலும், ஜல்லிக்கட்டு விளையாட்டினைத் தொடர்ந்து ஊக்குவித்திடவும், முதல்வரின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சென்னை, செங்கல்பட்டு உள்ளிட்ட 7 மாவட்டங்களுக்கு சனிக்கிழமை கனமழை வாய்ப்பு!

சென்னை, ஜன.24-

தமிழகத்தில் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் உள்ளிட்ட 7 மாவட்டங்களில் நாளை (ஜன.24) கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: கிழக்கு திசையில் இருந்து மேற்கு நோக்கி நகரும் வளிமண்டல அலை (Easterly waves) நிகழ்வு தற்போது நிலவுகிறது. மேலும் தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.



இதன் காரணமாக தமிழகத்தில் நாளை (ஜன.24) கடலோர தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், உள் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரியிலும் சனிக்கிழமை கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

25ம் தேதி தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், 26ம் தேதி தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், கடலோர தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் ஓரிரு இடங்களிலும், 27 முதல் 29ம் தேதி வரை தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மிதமானது முதல் கனமழை பெய்யக்கூடும்.

நாளை மற்றும் 25 தேதிகளில் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 60 கிமீ வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என்று செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## சென்னை, பெங்களூரு, ஹைதராபாத் நகரங்களில் வீடு விற்பனை 15% உயர்வு

புதுடெல்லி, ஜன.24-

சென்னை, பெங்களூரு, ஹைதராபாத் நகரங்களில் வீடு விற்பனை 15% அதிகரித்துள்ளதாக ஓர் அறிக்கை தெரிவிக்கிறது.



ரியல் எஸ்டேட் ஆலோசனை வழங்கும் பிராப்டைகர்.காம், நாட்டின் முக்கிய 8 நகரங்களில் புதிய வீடுகள் விற்பனை தொடர்பான புள்ளி விவர அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அதன் விவரம் வருமாறு: கடந்த 2025ம் ஆண்டில் 8 நகரங்களில் ஒட்டுமொத்தமாக 3,86,365 புதிய வீடுகள் விற்பனை ஆனது. இது 2024ம் ஆண்டின் 4,36,992 ஐவிட 12% குறைவு. இதில் மும்பையில் 26%, டெல்லியில் 13%, புனே நகரில் 12% மற்றும் அகமதாபாத்தில் 12% வீடு விற்பனை குறைந்துள்ளது.

அதேநேரம், சென்னையில் 2024ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது புதிய வீடு விற்பனை 55% அதிகரித்து 24,892 ஆகி உள்ளது. இதுபோல ஹைதராபாத்தில் 6%, பெங்களூருவில் 13%, கொல்கத்தாவில் 12% விற்பனை அதிகரித்துள்ளது.

இதுகுறித்து பிராப்டைகர்.காம் இணையத்தை நிர்வகிக்கும் அவுரம் ப்ராப்டெக் நிறுவன செயல் இயக்குநர் ஓங்கார் ஷெட்டி கூறும்போது, “2025ல் வீடுகளுக்கான தேவை முற்றிலும் குறைந்துவிடவில்லை. மாறாக அது ஒரு மறுசீரமைப்புக்கான ஆண்டாகும். வாங்குபவர்கள் தொடர்ந்து செயல்பாட்டிலேயே இருந்தனர். ஆனால் முடிவுகளை எடுப்பதில் மிகவும் நிதானமாக செயல்பட்டனர்.

அதே வேளையில், கட்டுமான நிறுவனங்கள் விநியோக நிர்வாகத்தை மிகுந்த ஒழுங்குடன் கையாண்டன. இது தேக்க நிலை ஏற்படாமல் தடுத்ததுடன், விற்பனை அளவு குறைந்த போதிலும் விலை குறையாமல் உறுதியுடன் இருக்க உதவியது. நகரங்களுக்கு இடையே, 3 தென்னிந்திய நகரங்கள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டன" என்றார்.

## “நீங்கள் கொடுத்த வாக்குறுதி நினைவில் இருக்கிறதா?” ஸ்டாலினுக்கு அண்ணாமலை பட்டியல்

சென்னை, ஜன.24-

“திமுக கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளில் 10% கூட முழுமையாக நிறைவேற்றாமல், நாளொரு நாடகம் நடத்திக் கொண்டிருக்கிறது. இனியாவது மக்களுக்கான அரசியலை முன்னெடுக்கக் கற்றுக் கொள்ளுங்கள்” என முதல்வர் ஸ்டாலினுக்கு தமிழக பாஜகவின் முன்னாள் தலைவர் அண்ணாமலை பதிலளித்துள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘திமுக கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளில் 10% கூட முழுமையாக நிறைவேற்றாமல், நாளொரு நாடகம் நடத்திக் கொண்டு, நாட்டு நடப்பு என்னவென்றே தெரியாமல், யார் எதை எழுதிக் கொடுத்தாலும், அதை அப்படியே கிளிப்பிள்ளை போல ஒப்பிக்கிறார் முதல்வர் ஸ்டாலின்.

சமக்ர ஷிக்ஷா (Samagra Shiksha) திட்டத்தின் ஓர் அங்கமான பிஎம் ஸ்ரீ பள்ளிகளை தமிழகத்தில் கொண்டு வருவோம் என்று கடிதம் மூலமாக தெரிவித்துவிட்டு, பின்னர் அந்தர் பல்டி அடித்தது ஏன்? நிறைவேற்றாத திட்டத்துக்கு நிதி எப்படி ஒதுக்குவார்கள்?

தொகுதி மறுவரையறையில் தென் மாநிலங்களில் எந்த தொகுதியும் குறைக்கப்படாது என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, கடந்த 2025ஆம் ஆண்டு பிப்ரவரி மாதமே தெரிவித்துவிட்டார். உங்களுக்கு செய்தித்தாள் வாசிக்கும் பழக்கம் இருக்க வாய்ப்பில்லை. உங்களுக்கு எழுதிக் கொடுப்பவர்களுக்குமா இல்லை?

தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு அதலபாதாளத்தில் இருக்கும்போது, ஆளுநர் உங்களுக்குப் பாராட்டுப் பத்திரம் வாசிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களா? உங்கள் நிர்வாகத் தோல்விக்கு ஆளுநரை குற்றம் சொல்வதை எப்போது நிறுத்துவீர்கள்?

100 நாள் வேலை திட்டத்தை 150 நாட்களாக உயர்த்துவோம் என்று நீங்கள் தேர்தல் வாக்குறுதி கொடுத்து ஐந்து ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனால், ஒரு துரும்பைக் கூட கிள்ளிப் போடாமல் இருக்கிறீர்கள். மத்திய அரசு தற்போது அதனை 125 நாட்களாக உயர்த்தி இருக்கிறது. இனிமேலும் அத்திட்டத்தில் உங்கள் கட்சியினரால் ஊழல் செய்ய முடியாது என்ற இயலாமை, உங்களை இப்படி புலம்ப வைத்திருக்கிறது.

எய்ம்ஸ் கட்டுமானம் வேகமாக நடந்து கொண்டிருக்கிறது. வேங்கைவயலுக்குதான் நீங்கள் போகவில்லை. மதுரைக்குச் சென்று பார்த்திருக்கலாமே? உங்களை யார் தடுத்தார்கள்? நீங்கள் விரும்பவில்லை என்றாலும், இந்த வருடம் மதுரை எய்ம்ஸ், மக்கள் பயன்பாட்டிற்கு வரும். மதுரையில் வேளாண் பல்கலைக்கழகம் அமைப்போம் என்று நீங்கள் கொடுத்த வாக்குறுதி நினைவில் இருக்கிறதா? குறைந்தபட்சம் ஒரு செங்கல்லாவது வைத்தீர்களா?

இயற்கை பேரிடர்களுக்கான நிதியை மத்திய அரசு விடுவித்துவிட்டது. 5,000 கோடி ரூபாய் செலவு செய்தும், வருடந்தோறும் சென்னையை வெள்ளக்காடாக மாற்றுவதே உங்கள் சாதனை. கோவை மற்றும் மதுரை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு வேண்டுமென்றே உங்கள் அரசு தவறான DPRஐ வழங்கியது உங்களுக்கு நினைவில் இருக்கிறதா? திருத்தம் செய்யப்பட்ட DPR-ஐ மீண்டும் சமர்ப்பிக்க எண்ணம் இருக்கிறதா இல்லையா?

கீழடி ஆய்வறிக்கை, உலகளாவிய அளவில் கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதால், மேலும் அறிவியல்பூர்வமான ஆதாரங்கள் வேண்டும் என்று கேட்கிறது மத்திய அரசு. அந்த ஆதாரங்களைக் கொடுக்க என்ன தயக்கம் உங்கள் அரசுக்கு?

நீட் தேர்வை, தமிழக மக்கள் எதிர்க்கவில்லை. ஏழை, எளிய மாணவர்களுக்கு, நீட் ஒரு வரப்பிரசாதம் என்பதை, ஆண்டுதோறும் மருத்துவக் கல்லூரிகளில் இணையும் எளிய பின்புலம் கொண்ட பெற்றோர்கள் கூறுவார்கள். மருத்துவக் கல்வி இடங்களை விற்று, இத்தனை ஆண்டு காலம் பல கோடி சம்பாதித்த திமுக கும்பலுக்கு மட்டுமே நீட் தேர்வு கசக்கிறது.

ஒரு காலத்தில், தங்களுக்குப் பிடிக்காதவர்கள் குறித்து, பொதுக் கழிவறைகளில் கரித்துண்டால் எழுதி அற்ப சந்தோஷப்படும் மோசமான பழக்கத்தை, ஏஐ காலத்திலும் தொடராதீர்கள் முதல்வர் ஸ்டாலின். இனியாவது மக்களுக்கான அரசியலை முன்னெடுக்கக் கற்றுக் கொள்ளுங்கள்’ என்று அண்ணாமலை தெரிவித்துள்ளார்.



# தென்காசி மாவட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள்

தென்காசி, ஜன.24-
தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்கள் பெற்று உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தென்காசி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, கைபேசி மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான காதொலிகருவி, சக்கரநாற்காலி, பெட்ரோல் ஸ்கூட்டர், வங்கிக்கடனுதவி, ஊன்றுகோல் மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பான 52 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் வழங்கினார்கள்.

தொடர்ந்து, 03 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு தலா ரூ.3,285 வீதம் ரூ.9855 மதிப்பீட்டிலான காதொலி கருவிகளையும், 01 மாற்றுத்திறனாளி பயனாளிக்கு ரூ.15,750 மதிப்பீட்டிலான சக்கர நாற்காலியினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் மகிழ்நன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் கணேசன், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் ரம்யா, இளநிலை மறுவாழ்வு அலு வலர் செல்வி.மஞ்சுமிதா மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# சங்கரன்கோவில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் செயல்முறை விளக்கம்

தென்னாசி, ஜன.24-
தென்னாசி மாவட்டம், சங்கரன்கோவில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் செயல்முறை விளக்க மையத்தை சங்கரன்கோவில் வருவாய் கோட்டாட்சியர் ஆ.அனிதா பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள். மேலும், இந்தியத் தேர்தல் ஆணையத்தின் உத்தரவு மற்றும் சென்னை, தலைமை தேர்தல் அலுவலர் அவர்களின் அறிவுறுத்தல் படி விரைவில் நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல், 2026 ஸ்ரீஇன் போது பொது மக்களுக்கு வாக்குப்பதிவு இயந்திரங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகைக்காக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் செயல்முறைகள் குறித்து சங்கரன்கோவில், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்களில் நிலையான செயல்முறை விளக்க மையம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் ஆனந்த் மற்றும் அலுவலக பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# திருப்பூர் மாநகராட்சி பொது நிதியில் புதிய தார் சாலை அமைக்கும் பணி பூமி பூஜை விழா

திருப்பூர், ஜன.24-
திருப்பூர் மாநகராட்சி பொது நிதியின் திட்டத்தின் கீழ் வார்டு எண் 18,6,2, ஆகிய வார்டுகள் பயன்பெறும் வகையில் 13 கோடியே 38 லட்சம் மதிப்பீட்டில் புதிய தார் சாலை அமைக்கும் பணி பூமி பூஜை விழா நடைபெற்றது விழாவினை திருப்பூர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் துவக்கி வைத்தார். இந்த விழாவில் திமுக மாநகர செயலாளர் தங்கராஜ், 2 வது மண்டல தலைவர் தம்பி ஆர் கோவிந்தராஜ், உதவி செயற்பொறியாளர் ஹரி, இளநிலை பொறியாளர் ரமேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் தாமோதரன், கோபால்சாமி, லோகநாயகி, கருப்பசாமி மாலதி, கேபிள் ராஜ், பாண்டியன் நகர் பகுதி செயலாளர் ஜோதி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பாலன், திமுக வார்டு செயலாளர்கள். செந்தில்குமார், மூர்த்தி, சுரேஷ், சிபிஎம் மனோகரன், காங்கிரஸ் கட்சி சார்பில் குரு மெடிக்கல் குருசாமி, திமுக பகுதி இளைஞரணி செயலாளர் பி டி ஆர் பிரகாஷ் மற்றும் பல்வேறு அரசியல் கட்சி நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள் பங்கேற்றனர்...

# மதுரை மாவட்டத்தில் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து 2025ஆம் ஆண்டு இந்திய வெளியுறவு பணி பயிற்சி அலுவலர்கள் பார்வை

மதுரை, ஜன.24-
மதுரை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து 2025 ஆம் ஆண்டு தொகுதி இந்திய வெளியுறவு பணி பயிற்சி அலுவலர்களான இராம் சவுத்ரி மக்வானா பார்கவ் மகேஷ்குமார், நம்ரதா ஜெப் ரோஹன் சாகர் டானிஸ்க் ஜெடம் ஜி ஜி ஏ எஸ் ஆகியோர் இன்று ( பார்வையிட்டனர்.



மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் ஒத்தக்கடை அரசு ஆரம்ப பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்டு வரும் உணவினை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

தொடர்ந்து திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம், கரடிக்கல் கிராமத்தில் தோட்டக்கலை மற்றும் மலைபயிர்கள் துறை சார்பில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள பசுமைக் குடிலில் பயிரிடப்பட்டுள்ள செடிகளை பார்வையிட்டனர்.

பின்னர் மேற்கு ஊராட்சி ஒன்றியம் தேனூர் ஊராட்சி கட்டப்புளி கிராமத்தில் 400 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட இலவச வீட்டுமனைப் பட்டா இடத்தில் முதற்கட்டமாக 72 மாற்றுத்திறனாளிகள், 37 திருநங்கைகள், 85 வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள நபர்கள் என மொத்தம் 194 பயனாளிகளுக்கு கலைஞர் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் புதிய வீடுகள் கட்டப்பட்டு வரும் பணிகளை பார்வையிட்டனர். அதனைத்தொடர்ந்து மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் பக்தர்களுக்கு வழங்கப்பட்டு வரும் அன்னதானத்தை பார்வையிட்டனர்.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இருந்து சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் என்ற விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன்குமார், கொடியசைத்து துவக்கி வைத்தார்,



■ 16வது தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு, திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மனிஷ் நாரணவரே தலைமையில், திருப்பூர் எம்பி. கே.சுப்பராயன், திருப்பூர் மேயர் ந. தினேஷ்குமார் முன்னிலையில், மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில், வாக்காளர் தின உறுதிமொழி ஏற்றுக் கொள்ளப்பட்டது. உடன் திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் அமித், மாவட்ட வன அலுவலர் ராஜேஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குனர் சங்கமித்திரை, திருப்பூர் மாநகராட்சி மண்டல குழு தலைவர்கள் மற்றும் அனைத்து துறை அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

# கவிஞர் வைரமுத்து வரவேற்பு நிகழ்வில் காலணி வீச்சு நடந்தது என்ன?

திருப்பூர், ஜன.24-
திருப்பூரில் நேற்று நடை பெற்ற பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்க வந்த கவிஞர் வைரமுத்துவுக்கு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே வழக்கறிஞர்கள் வரவேற்பு அளித்தனர். அங்கு வந்த 45 வயது மதிக்கத்தக்க பெண், திடீரென தர்ணாவில் ஈடுபட்டார்.

அதேவேளையில் வரவேற்பு நிகழ்வை முடித்துவிட்டு, கவிஞர் வைரமுத்து வாகனத்துக்கு செல்ல முயன்றார். அப்போது, தர்ணாவில் ஈடுபட்ட பெண், திடீரென வழக்கறிஞர்களை நோக்கி காலணிகளை வீசினார்.



அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த போலீஸார், அந்த பெண்ணை பிடித்து திருப்பூர் தெற்கு காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரித்தனர். அவரது பெயர் ஜெயா என்பதும், மனநலம் பாதித்தவர் என்பதும் விசாரணையில் உறுதியானது.

அவ்வப்போது மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் நீதிமன்றம் உள்ளிட்ட பகுதிகளில் தொடர்ந்து பிரச்சினையில் ஈடுபட்டு வந்தது தெரியவந்தது. அந்த பெண்ணை திருப்பூர் தெற்கு போலீஸார் கைது செய்தனர்.

# தமிழ்நாடு மருத்து துறை அமைச்சுப் பணியாளர் சங்க மாநில உயர்நிலைக் குழு கூட்டம்

திருச்சி, ஜன.24-
தமிழ்நாடு மருத்துவத்துறை அமைச்சுப் பணி அலுவலர் சங்க மாநில உயர்நிலைக் குழு கூட்டம் ஹோட்டல் ஆனந்தா (ராசி ஹால் ) திருச்சி பேருந்து நிலையம் எதிரில் மாநில மையம் கூட்டம் நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்கு மாநில, மாவட்ட நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு மாநிலத் தலைவர் ரவிக்குமார் தங்களை அன்புடன் கேட்டுக்கொண்டுள்ளார்.



SPARES
2 WHEELER
SDK spare parts
HERO HONDA, TVS, BAJAJ, ROYAL ENFIELD, KTM, YAMAHA
ஒரிஜினல் ஸ்பேர்ஸ் கிடைக்கும்
No.3, மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேஷன் காம்ப்ளக்ஸ், சங்கரன்கோவில்
7540002331 / 9865147105

மாரி டீ கடை
மாரி ஹோட்டல்
ராஜபாளையம் ரோடு, SBI வடபுறம், சங்கரன்கோவில்
Everything IS BETTER WITH Tea

# திருப்பூர் புறநகர் மாவட்ட அகில இந்திய பார்வர்டு பிளாக் சார்பில் நேதாஜி பிறந்தநாள் விழா

திருப்பூர்.ஜன,24-
தேச தந்தை நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் 129 வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு, அகில இந்திய பார்வர்டு பிளாக் திருப்பூர் புறநகர் மாவட்ட கட்சி சார்பில் அவிநாசி பேருந்து நிறுத்தம் வளாகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டு, பின்பு கட்சியின் புலி கொடியேற்றி பொதுமக்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கும் விழா



நடைபெற்றது. விழாவினை மாவட்ட பொதுச் செயலாளர் தேளி காளிமுத்து தேவர் துவக்கி வைத்தார். மாவட்டத் தலைவர் தாமோதரன், மாவட்ட துணைத்தலைவர் தனசேகர், மாவட்ட பொறுப்பாளர்கள் பசும்பொன் பாலு, சுப்பையா, பிரபு, தொ.மா.ரமேஷ்., இளைஞர்அணி செயலாளர் சரவணன், மத்திய குழு உறுப்பினர் ராஜசேகர், மாவட்ட துணைத்தலைவர் செல்வம், மாவட்டத் துணைச் செயலாளர் வீரமணி, மாணவர் அணி செயலாளர் நேதாஜி, பிரபாகரன், தகவல் தொழில்நுட்ப அணி ஜீவா, அவிநாசி ஒன்றிய செயலாளர் பாண்டியன், ஒன்றிய தலைவர் சுந்தரமூர்த்தி, ஒன்றிய தலைவர் ஜேசுதாஸ், ஒன்றிய துணைச்செயலாளர் அஜித்குமார், பொருளாளர் மணிகண்டன், துணைப் பொருளாளர், முகேஷ் குமார், பூண்டி நகரச் செயலாளர் ரமேஷ் குமார், இளைஞரணி செயலாளர் தேன்ராம் உள்ளிட்ட புறநகர் மாவட்ட நிர்வாகிகள் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000